# குடுமியான் மலைக்கோயில் ஆடற் சிற்பங்கள்

**இராசையா தனராஜ்,**
**விரிவுரையாளர், நடனத்துறை,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**
dhanaraj.r@uinv.jfn.ac.lk

3

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்கும் குடுமியான் மலைக்கோயில் சிறப்புமிக்க கட்டிட, சிற்ப வேலைபாடுகளுடன் அமைந்துள்ள மிகவும் புராதனமான கோயிலாகும். இக்கோயிலிலுள்ள ஆடற்சிற்பங்களில் காணப்படுகின்ற தனித்துவமான பண்புகளை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரையானது அமைந்திருக்கின்றது.

குடுமியான்மலைக்கோயிற் சிற்பங்கள் குறித்து பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் ஆடற்கலையுடன் தொடர்புபட்ட வகையில் மிக அரிதாகவே தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது. இசைக்கல்வெட்டு மற்றும் வீணை ஏந்திய சிவன் போன்றவையும் அளவில் பெரிய சிற்பங்களின் அழகியல் அம்சங்களும் வெகுவாகப் பேசப்படுவது போல ஆங்காங்கே காணப்படும் மிகச் சிறிய சிற்பங்களைப் பற்றிய தகவல்கள் குறைவாகவே உலவுகின்றன என்னும் கருத்தினை ஆய்வுச்சிக்கலாகக்கொண்டு இக்கட்டுரையானது விரிகின்றது.

அவ்வகையினில் குடுமியான் மலைக் கோயிற் தூண்களிலும், மேற்தளங்களிலும் காணப்படும் சிறு சிறு சிற்பங்களில் வெளிப்படும் ஆடல் நுட்பங்கள் மற்றும் அழகியல் தன்மைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். குடுமியான் மலைக்கோயிலில் காணப்படும் அளவில் சிறிய ஆடற்சிற்பங்கள் ஆடல் அழகியலில் சிறந்து விளங்குகின்றன என்னும் கருதுகோளின் அடிப்படையில் இக்கட்டுரை நகர்கின்றது.

**திறவுச் சொற்கள் :** குடுமியான் மலைக்கோயில், தூண்சிற்பங்கள், ஆடற்சிற்பம், ஆடல் நிலைகள், பாதபேதம்

**குடுமியான் மலைக்கோயில்**

தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில் குடுமியான் மலைக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள மூலவரின் தலையில் குடுமி போன்ற அமைப்புக் காணப்படுவதனால் இப்பெயர் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது. தனக்கு பூசை செய்யும் பக்தனை காப்பதற்காக இறைவன் குடுமியுடன் காட்சியளித்ததாகத் தல வரலாறு கூறுகின்றது.

இக்கோயில் கட்டப்பட்ட காலம், கட்டியவர்கள் பற்றி அறிஞர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. எனினும், "இக்கோயில் யாரால் கட்டப்பட்டது என்பதற்கு நேரடியான கல்வெட்டுச் சான்றுகள் ஏதும் இல்லை. தேவாரம் பாடிய மூவராலும் இக்கோயில் பாடப்படவும் இல்லை. எனவே இது அவர்கள் வாழ்ந்த கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றியதாக இருக்க வேண்டும். பிற இடங்களில் சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுகள் இருந்தபோதிலும்

கருவறையில் இல்லை. பிற்காலத்திய நாயக்க மன்னர் காலத்தியவையே உள்ளன. எனவே கருவறை பிற்காலத்தவரால் கட்டப்பட்டிருக்கவேண்டும்"[1] எனக் குறிப்பிடும் சொ.சாந்தலிங்கம் சில கல்வெட்டுச் சான்றுகளுடன் "இக்கோயில் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலாவது, பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலாவது எடுக்கப்பட்டிருக்கவேண்டும்"[2] என்று குறிப்பிடுகின்றார்.

**அமைப்பு**

இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கோபுரம், விமானம், நந்தி மண்டபம், அனுப்பு மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், சிற்பத் தூண்கள், கோட்டங்கள், துவாரபாலகர்கள், திருச்சுற்று எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இவற்றில் பலவும் வெவ்வேறு காலங்களில் கட்டப்பட்டவையாகும்.

**ஆடற்சிற்பங்கள்**

இக்கோயிலின் சிற்பத்தூண்கள், கோட்டங்கள் மற்றும் கூரையில் பல்வேறு ஆடல் கோலங்களில் அமைந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. கடந்த 19.08.2022 அன்று அழகப்பா பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஏற்பாடு செய்திருந்த கல்விச் சுற்றுலாவில் குடுமியான் மலைக்கோயிலுக்குச் சென்றபோது எடுக்கப்பட்ட ஆடற்சிற்பங்களின் புகைப்படங்களைக்கொண்டே இக்கட்டுரை அமைகின்றது. அவ்வகையில் சரியாக அந்த சிறபங்கள் எவ்விடத்தில் அமைந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூறமுடியாதுள்ள போதும், இங்கு இணைக்கப்பட்டுள்ள சில புகைப்படங்கள் சான்றுகளாக அமையும்.

கோயிலின் திருச்சுற்றில் காணப்படும் ஆடற் பெண்ணொருத்தியின் சிறிய சிற்பம் ஒன்று கங்காவதரணம் மற்றும் சகடாஸ்யம் ஆகிய இரு கரணங்களினதும் அமைப்பினை ஒத்ததாகக் காணப்படுகின்றது. சகடாஸ்யத்தில் இரு கால்களையும் தலைக்கு மேல் கொண்டு வருவது போலவே பெரும்பாலான இடங்களில் அமைந்துள்ளன. ஆனால், இங்கு ஒரு காலினை தலைக்கு மேலும், மற்ற காலினைக் கங்காவதரணம் போல் உயர்த்தி சகடாஸ்ய காலின் முழங்காலிலும் பொருத்தி இருப்பது போல் அமைந்திருப்பது, ஆடுநரின் உடலியற் தன்மையினை வியக்க வைக்கின்றது. அவ்வாறே அரைமண்டி நிலையில் இடது காலினைத் தலைக்கு மேலுயர்த்தி வலது கையினாற் பிடித்து இடது கையை வலது பக்கம் டோலமாக விட்டிருக்கும் வகையினில் அமைக்கப்பட்டுள்ள சிற்பமும் உடற் சமநிலையைப் பேணி அழகியலுடன் அமைக்கப்பட்டுள்ளது.

பிறிதொரு ஆடற்பெண்ணின் சிற்பத்தில் அரைமண்டி நிலையில் வலது காலினை அஞ்சிதமாக வைத்து வலது கையில் மலர் ஏந்தி இடது கையினை டோலமாக விட்டு நிற்பது போல அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் காதணி, தலையலங்காரம் மற்றும் விசிறி போன்ற ஆடை அமைப்பு என்பவற்றினை ஓரளவிற்குக் காணக்கூடியதாகவிருக்கின்றது. நீண்ட தலைமுடி மற்றும் தாடி மீசையுடன் முனிவர் போல தென்படும் ஒருவர் கைகளில் ஏதோ ஒரு பொருளை ஏந்தி நிற்கும் நிலைச் சிற்பமொன்றில் அவரது பாதப் பிரயோகம் முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைந்துள்ளது. அதாவது இரு முழங்கால்களையும், பாதங்களையும் வலது பக்கம் திருப்பி அரைமண்டி நிலையில்

அமர்ந்திருக்கின்றார். இது வழமையான பாதபேதங்களில் இருந்து மாறுபட்டதாகத் தோன்றுகிறது.

புஜங்கத்ராஸிதம் கரண நிலையினைப் போலமைந்த சிறிய சிற்பமொன்றில் இடது கையை டோலமாகவும், வலது கையைத் தலைக்கு மேலும் உயர்த்திப் பிடித்து இரு கைகளிலும் ஏதோவொரு பொருளினை ஏந்தி ஆடுவது போலத்தோன்றுகிறது. முனைவர் இரா.இராமகிருட்டிணன் குறிப்பிடும் கஜகிரீடை கரணம் போன்ற அமைப்பில்[3] காணப்படும் சிறிய சிற்பமானது பின்பக்கத்திலிருந்து உடலை நன்கு முன்பக்கமாகத் திருப்பி இடையிலும் தலையிலும் கைவைத்தபடி ஒரு கரண சிற்பம் காணப்படுகின்றது. அதன் அருகினில் மற்றொரு மிகச்சிறிய ஆடல் சிற்பம் ஸ்வஸ்திக நிலையில் வலது கை இடது பக்க டோலமாகவும், இடது கை தலைக்கு மேலும் இருப்பது போலத் தோன்றுகிறது. எனினும் இச்சிற்பம் தெளிவாகப் புலப்படவில்லை.

நடராஜர் போன்ற அமைப்பில் குஞ்சிதமாக காலுயர்த்தி நிற்கும் சிற்பத்தின் வலது கையானது பொதுவாக அபயகரம் இருக்கும் இடத்திலிருந்து சற்றுத் தொலைவினில் காணப்படுகின்றது. கையருகில் காணப்படும் சிறிய பொருள் டமருகமாகக்கொண்டால் இச்சிற்பம் டமருகம் ஏந்தி ஆடுவதனைக் குறித்துள்ளதெனக் கொள்ளலாம். அர்த்தரேசித நிலையில் அமைந்திருக்கும் ஆடற்பெண்ணின் சிற்பத்தில் வலது பக்கமாகக் கொண்டை அமைப்பில் தலையலங்காரம் அமைந்துள்ளமையினைக் காணமுடிகின்றது.

புஜங்காஞ்சிதம் போன்ற அமைப்பில் காணப்படும் ஆடற் பெண்ணின் சிற்பத்தில் இடது கையினை கீழ்நோக்கியும், வலது கையினை மேலுயர்த்தியும் அமைத்திருப்பது ஆடற் சலனத்தை காட்டுவது போன்று தோன்றுகின்றது. மேலும் பூதகணம் ஒன்று டோலக் கைகளை மேலும் கீழுமாகப் பிடித்து அரைமண்டியில் வலது காலூன்றி இடது கால் முன்னுயரத்தி ஆடுவது போல் அமைந்திருக்கும் சிற்பமொன்றில் மகிழ்ந்தாடுதல் போன்ற பாவம் தொனிக்கின்றது.

மேற்கூரைகளின் ஓரங்களில் வரிசையாகக் காணப்படும் ஆடற் சிற்பங்கள் குழு ஆடல் முறையினை வெளிப்படுத்துவனவாகவுள்ளன. குறிப்பாக இருவர் சேர்ந்து ஆடுவது போல் அமைந்திருக்கும் இச்சிற்பங்களில் கைப்பிணைந்தாடும் வகையிலானச் சிற்பங்களை அதிகமாகக் காணமுடிகின்றது. மேலும் ஒரே நிலையினை எதிரெதிர் பக்கங்களுக்குச் செய்து குழு ஆடல் சமநிலைப்படுத்தப்பட்டிருப்பதும், வெவ்வேறு ஆடல்களை இயற்றும் ஆடுனர் வரிசையாக நிற்பதுவும் ஓர் ஆடல் ஊர்வலத்தைக் காண்பதுபோல கண்களில் நிறைகின்றது.

இவை தவிரவும் மத்தளம் வாசிக்கும் கலைஞர் பிரேரித நிலையில் நிற்கும் சிற்பமும், கடீசமம் கரண நிலையில் அமைந்திருக்கும் சிற்பமும் சுற்று மதிலின் கல்லொன்றில் விரிந்த சடை, நான்கு கைகள், தூக்கிய திருவடி, மலர்ந்த முகமென விளங்கும் ஆனந்தக் கூத்தாடும் பெருமானின் சிறிய அழகியத் தோற்றமும் கலைநயத்துடன் விளங்குகின்றன.

**முடிவுரை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்கும் குடுமியான் மலைக்கோயிலிலுள்ள ஆடற்சிற்பங்களைக் குறித்ததான இக்கட்டுரையில் அங்கு காணப்படுகின்ற ஆடற்சிற்பங்களின் ஆடல் நிலைகள், உடலமைப்புகள் மற்றும் அழகியல் தன்மைகள் பற்றி மிகச்சுருக்கமாக அளிக்கப்பட்டுள்ளது. இங்கு கூறப்பட்ட பெரும்பாலான சிறபங்கள் கோயிற் சுற்றுச்சுவரில் காணப்படும் கர்ணக்கூடு அல்லது பாதவர்க்கம் என்று கூறப்படும் சிறிய திருவாசி போன்ற அமைப்பின் மத்தியில் காணப்படும் மிகச் சிறிய சிற்பங்களேயாகும். இத்தகையவற்றை சிற்ப மற்றும் ஆடல் துறை சார்ந்த வல்லுநர்கள் ஆராயும் போது இன்னும் அரிய தகவல்களைப் பெற முடியும் என்பது திண்ணம். எனவே இதுவரைக்கண்ட விடயங்களினைத்தொகுத்து நோக்குகையில் குடுமியான் மலைக்கோயிலில் காணப்படும் சிறு சிறு ஆடற்சிற்பங்கள் ஆடல் அழகியல் மிகுந்துனவாக விளங்குகின்றன என்பதை அறியலாம்.














**மேற்கோள்கள்**

1. சாந்தலிங்கம், சொ. (1981), குடுமியான்மலை, ப. 39
2. மேலது, ப.40
3. இராமகிருட்டிணன், இராம. முனைவர், (2020), சிவதாண்டவம், ப 158

**உசாத்துணை**

- 19.08.2022 - கள ஆய்வு - புதுக்கோட்டை குடுமியான் மலைக்கோயில்.
- இராமகிருட்டிணன், இராம. முனைவர், (2020), சிவதாண்டவம், சீதை பதிப்பகம்.
- சாந்தலிங்கம், சொ. (1981), குடுமியான்மலை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.